விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 ஐப்பசி 29 ஸபர் 20 இதழ் 273
யாழ்ப்பாணம் புதன்கிழமை 14-11-84


நேற்று இருமணிநேர சந்திப்பு:

## இராணுவக் கெடுபிடி, தமிழ் பிரதேச அச்சுறுத்தல்கள்!

### ஜனுதிபதியிடம் கூட்டணி நேரில் ஆட்சேபம்!!

[கொழும்பு]

தமிழ் பகுதிகளில் இடம் பெறும் இராணுவக்கெடுபிடிசள் குறித்தும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமிழ்ப் பிரதேசங்களுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்தும் ஜனுதிபதியிடம் நேற்று தமிழர் கூட்டணியினர் நேரடியாக ஆட்சேபம் தெரிவித்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் திரு. அ. அமிர்தலிங்கம், முன்னுள் திருமலை எம். பி இரா. சம்பந்தன், திரு நீலன் திருச்செல்வம் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். அரசு தரப்பில் ஜனுதிபதி ஜயவர்த்தன, அமைச்சர்கள் திரு. லலித் துலத்முதலி, திரு. எ,சி.எஸ். (8ம் பக்கம் ம் 4 கலம் பார்க்க)

## இன்று 'பட்ஜட்'

(கொழும்பு)

ஐ. தே கட்சி அரசாங்கத்தின் நிதி அமைச்சர் திரு. ரெனி டி மெல் இன்று பிற்பகல் வரவு செலவுத் திட்ட யோசனைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தில் வழமைபோல் மதுபானம், சிகரட், ஆடம்பரப் பொருட்களின் விலைகள் உயர்த்தப்படு [8ம் பக்கம் 5ம் கலம் பார்க்க]

# டிச. 24ல் இந்தியத் தேர்தல்

[புதுடில்லி]

இந்தியாவின் பொதுத்தேர்தலை அடுத்த மாதம் 24ம் திகதி நடத்தப்போவதாக பிரதமர் திரு. ரஜீவ்காந்தி நேற்று அறிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகள்சபைத் தேர்தல் அடுத்த மாதம் 24ம் திகதி தொடக்கம் 27ம் திகதிவரை நடைபெறும் என்று தேர்தல் ஆணையாளர் செய்தி நிருபர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

1980ம் ஆண்டு தெரிவுசெய்யப்பட்ட லோக் சபா உறுப்பினர்களின் பதவிக்காலம் ஜனவரி 20ம் திகதியுடன் முடிவடைகிறது.

திரு. ரஜீவ்காந்தி தனது தாயார் இறந்த 13 நாட்களின்பின் தேர்தல் நடாத்துவது பற்றி அறிவித்திருக்கிறுர்.

சீக்கியர்கள் பெரும்பான்மையாக வாழும் பஞ்சாப் மாநிலத்திலும், அஸாமிலும் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ளதால், அங்கு தேர்தல்கள் நடத்தப்படமாட்டாதென்றும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

லோக்சபாவுக்கான 544 ஸ்தானங்களில் திரு. காந்தியின் காங்கிரஸ் கட்சி 354 ஸ்தானங்களைக் கொண்டிருக்கிறது. ராஜ்யசபாவிலும் காங்கிரஸ் கட்சிக்குப் பெரும்பான்மைப் பலம் இருந்துவருகிறது.

இந்தியப் பாராளுமன்றம் இம்மாதம் 19ம் திகதி கலைக்கப்படும்.

● உயிருடன் பலர் மின் கம்பத்தில்

# ஆயுதபடையின் சோதனையில் கிளிநொச்சி ஸ்தம்பித்தது

## துப்பாக்கிவேட்டு சத்தம் கேட்டு மக்கள் கிலிகொண்டு ஓட்டம்!

(கிளிநொச்சி நிருபர் கே. வி. கே. திருலோகமூர்த்தி)

ஆயுதப்படை நடத்திய திடீர்ச் சோதனையினுல் கிளிநொச்சி நேற்று முற்ருக ஸ்தம்பிதமடைந்தது!

காலை முதல் நான்கு மணி நேரத்துக்கு ஆயுதப்படையினரின் இந்த நடவடிக்கையினுல், கண்டி வீதியில் போக்குவரத்துக்கள் தடைப்பட்டதோடு, நூற்றுக் கணக்கான இளைஞர்கள் கைதாகினுர்கள்! தபால் நிலையத்தைச் சுற்றிதுப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

கிளிநொச்சி நகரத்தில், ராணுவத்தினர் நேற்றுக்காலை முதல் மிகக்கடுமையான சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இந்தச் சோதனை நான்கு மணிநேரம் நீடித்தது. ரணுவத்தினர் காலையிலேயே சோதனையை ஆரம்பித்தனர். கண்டிவீதியில் போக்குவரத்து நடந்துகொண்டிருந்த நேரத்தில், ராணுவத்தினர் நடாத்திய சோதனையால், போக்குவரத்து தடையானது. (5-ம் பக்கம் 4ம் கலம்பார்க்க)

## வேம்படி ஆசிரியைகள், மாணவி மீது கவசவண்டியிலிருந்து திரவ வீச்சு!

### மாணவிக்கு உடன் சிகிச்சையளிக்கப்பட்டது!

[கா. யோகநாதன்]

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி ஆசிரியை இருவரும் மாணவி ஒருவரும் நேற்றுக் காலை கல்லூரிக்குச் சென்றுகொண்டிருந்தபோது கவச வண்டியில் ரோந்து சுற்றிவந்தவர்களால் திரவமொன்று தெளிக்கப்பட்டதாகத் தேசிய பந்தோபஸ்து அமைச்சுச் செயலாளர் திரு. சிறிவர்த்தனவின் கவனத்திற்க் கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை சுமார் 8-30 மணியளவில் முதலாம் குறுக்குத் தெருவால் ஆசிரியைகளும் மாணவியும் வந்துகொண்டி [5-ம் பக்கம் 5ம் கலம் பார்க்க]

யாழ். சம்பவத்துக்கு ஆட்சேபம்

## யாழ். ஆஸ்பத்திரி ஊழியர் ஊர்வலமாக வந்து மகஜர் கையளிப்பு

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் சகல தரத்திலுமுள்ள ஊழியர்கள் நேற்று நண்பகல் 12. மணிக்கு மௌனமாகவும் அமைதியாகவும் ஆஸ்பத்திரி வளவுக்குள் உள்ள பிரதான பாதைகளூடாக ஊர்வலமாக வந்து யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அண்மைக்காலச் சம்பவங்களை குறித்து வைத்திய அதிகாரியிடம் மகஜர் ஒன்றை சமர்ப்பித்தார்கள்.

(8-ம பக்கம் 3ம் கலம் பார்க்க)

எம். ஜி. ஆர். உடல்நிலை:

## சிறுநீரகமாற்றம் அவசியமில்லை

(நியூயோர்க்)

நியூயோர்க் மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவரும் தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி ராமச்சந்திரான் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைபெருமலே சுகமடையலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தகவலை தமிழக மக்கள் (8-ம் பக்கம் 3-ம் கலம்பார்க்க)





இன்று
மங்களகரமான
திறப்பு விழா

VICKNA
HARDWARE
STORES

விக்னு
ஹாட்வெயர்
ஸ்ரோஸ்

(Dealers in Paints Hardware and Water Pumps)

இடம்: 270, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(விக்னு டியூசன் சென்றருக்கருகாமையில்)

காலம்: 14-11-84 [புதன்கிழமை காலை 6 31 முதல் 7-31 வரையுள்ள சுப நேரத்தில்]

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விக்னு டியூசன் சென்றர்,
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

728

# விளம்பரம்

## விற்பனைக்கு

எமது ஸ்தாபனத்திற்குச் சொந்தமான (Toyota-Lorry) ரொயரா லொறி [24 Sri 7107] ஒன்றும் Apple-Computer ஒன்றும் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு நேரில், தொடர்புகொள்ளவும். சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. T Phone Neervely-1.
705

Bairaha Farms Hisexவெள்ளை பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள் 19-ம் திகதி விநியோகிக்கப்படும். சற்குணராசா பிறதர்ஸ். பிரம்படி. கொக்குவில். 710

## தேவை

பாவிப்பில் உள்ள Deep Freezers தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். எஸ் எஸ். கிறைண்டிங் மில்-பாம், மூளாய் தெற்கு, சுழிபுரம்.
713

பகுதிநேர / முழுநேர கணக்குப் பதிவாளர் (Book-Keeper) தேவை முழுவிபரங்களுடனும் விண்ணப்பிக்க: விளம்பர இல: 721, C/o, ஈழநாடு. 721

## காணி விற்பனவு

1. யாழ். கண்டி வீதியாக கச்சேரிக்கு அண்மையில் வீடு கட்டக்கூடிய 10 பரப்புக் காணி— பிரித்தும் கொடுக்கப்படும்.
2. யாழ். கொழும்புத்துறை துண்டி றோட்டுக்கு அண்மையில் 2 பரப்புக் காணி.

**வருடமொன்றுக்கு உங்கள் மூலதனத்திற்கு**

**25% தொடக்கம் 30% வரை**

வட்டி மாதாந்தம்/வருட முடிவில் பெற்றுக்கொள்ளலாம்.
விபரங்களுக்கு:
JAFFNA PROPERTY TRADES LTD.
3, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
போன்: 23698

## விற்பனைக்கு

வீடும் நிலமும்

1. கலட்டி ஒழுங்கை, வட்டுக்கோட்டை

மூன்று அறை, குசினி, குளிக்கும் அறை, மலசல அறைகள், மின்சாரம், தண்ணீர் வசதிகளுடன் அமைந்த வீடு நான்கு நிலப் பரப்புடன் விற்பனைக்குண்டு.

2. நவிண்டில், கரணவாய் வடக்கு, கரவெட்டி

உடுப்பிட்டி — மால்சந்தை றோட்டில் மின்சார வசதிகளுடன் மூன்று அறை, விறாந்தைகள் அடங்கிய வீடு, வேறான குசினி, கிணறு உட்பட பதினாறு நிலப்பரப்பு விற்பனைக்குண்டு.

நிலம்

1. மூளாய்

1. 1. மூளாய் றோட்டில் S. S. Grinding Mill-Farm அருகாமையில் ஐந்து பரப்பு நிலம் வீடு கட்ட உகந்தது விற்பனைக்குண்டு.

1. 2. மூளாய் S. S. Grinding Mill-Farmக்கு அருகாமையில் பத்துப் பரப்பு நிலம் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

1. 3. மூளாய் றோட்டில் தபால்பெட்டிக்கு முன்னால் உள்ள ஒழுங்கையில் இரண்டு அரைப் பரப்பு வீடு கட்ட உகந்த நிலம் விற்பனைக்குண்டு.

1. 4. மூளாய் மாதர் சங்கமுள்ள ஒழுங்கையில் எட்டுப் பரப்பு வீடு கட்ட உகந்த நிலம் விற்பனைக்குண்டு.

2. காங்கேசன்துறை

சீமெந்து ஆலையிலிருந்து 500 யார் தூரத்தில் மாவிட்டபுரம்குமாரகோயிலடிக்கு அருகாமையில் ''இம்பிலிசிட்டி'' என்னும் இரண்டு பரப்பு நிலம் விற்பனைக்குண்டு.

3. மூளாய்

''உப்புவயல்'' என்ற நெற்காணி ஏழு பரப்பு விற்பனைக்குண்டு.

4. சுளிபுரம்

''தரவை'' என்ற நெற்காணி இருபத்திஐந்து பரப்பு விற்பனைக்குண்டு,
வேறும் பல ஆதனங்கள் விற்பனைக்குண்டு.

விபரங்களுக்கு கீழ் காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

**RTR Holdings (Private) Ltd.**
DEALERS IN REAL ESTATE
Next to Moolai Sub Post office
**Moolai, Chulipuram.**
(712) Tel: Vaddu. exch 231

## பயிற்சி

எலெக்றிக்கல் வயறிங், வெல்டிங், றேடியோ, T. V. செய்முறைப் பயிற்சியுடன் இவ்வருடத்திற்கான கடைசிப் பிரிவு ஆரம்பமாகின்றது. 14-11-84 J. E. C. 33, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 646

## கல்வி

Radio and Electronic Engineering ஆண் பெண் ஆகிய இருசாராரும் பயிலலாம். சனி, ஞாயிறு காலை வகுப்புக்கள் கிழமை நாட்கள் வகுப்புக்களும் ஏற்றுக்கொள்ளப்படும். பொறியியலாளரால் விரிவுரைகளும் இந்தியாவில் பயிற்சி பெற்றவரால் பயிற்சி வகுப்புக்களும் நடைபெறும். தொடர்பு:- பொறியியல் கல்வி நிலையம். சாந்தி சினிமா அருகாமை, 22, ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம், 708

## தவறிவிட்டது

04-11-84 அன்று பளைக்கும் கிளிநொச்சிக்குமிடையில் கீழ்க் கண்ட விலாசமிடப்பட்ட எனது தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவுசெய்து இவ் விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும். இ. இரத்தினராசா, புலோப்பளை, பளை. 715

## யாருடையது

12-11-84ல் யாழ்ப்பாணம், மிட்டாசு கடைச் சந்தியில் சிறிய தொகை பணம் கண்டெடுக்கப்பட்டது. உரியவர் இல: 19, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணத்தில்தகுந்த அடையாளம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும். 714

## யாழ்ப்பாண அக்கடமி

**G. S. Q. 1986**

(Theory and Practical Classes)

கணித, விஞ்ஞான வகுப்புகள் மட்டும் தைமாதம்ஆரம்பமாகின்றன. பாடத் திட்டமும், செய்முறை வகுப்புகளும் நடைபெறும். சேர விரும்புவோர் வார நாட்களின் வகுப்புகளுக்குஅல்லது சனி,ஞாயிறு வகுப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம். மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

**அதிபர்**

தொலைபேசிஎண்: 22617,
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 720

PROFESSIONAL COURSES
சனி ஞாயிறு போயா நாட்கள்
ஆரம்பம்: 18-11-1984
I C M A Section A
May 1985 பரீட்சை
பூரண போதனை நெறி
ADV. LEVEL
ஆங்கில மொழியில்
கணக்கியல் வர்த்தகம்
பொருளியல்
Aug. 1985 பரீட்சை
Chartered Licentiate
March 1985 பரீட்சை
Auditing மட்டும்
துரித மீட்டல் வகுப்பு
Engineer in Society
May 1985 பரீட்சை
S. வன்னியசிங்கம்
B. Com. (Lond)
M. Sc. (Econ/Lond)
**வைரவர் கடாட்சம்**
பலாலி வீதி,
திருநெல்வேலி.
680 தொலைபேசி 24424

## நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**மைக்கல் சாமுவேல் சீவரத்தினம்**

ஞாபகார்த்த ஆராதனை 17-11-84 சனிக்கிழமை காலை 10-30மணிக்கு 48, ஸ்ரேசன் றோட், கோண்டாவிலில் நடைபெறும்.
724

அன்னை இந்திராவின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
M. G. M. FORAGE STORES

**இலங்கை எண்ணெய்க் கொழுப்புக் கூட்டுத்தாபனம்**
(CEYLON OILS AND FATS CORPORATION SEEDUWA)
யாழ், திருநெல்வேலி உற்பத்திப் பொருட்கள்
**விற்பனையாளர்கள்**
என்பவர்களால் தயாரிக்கப்பட்ட
முட்டையிடும் கோழித்தீன், வளரும் கோழித்தீன், குஞ்சுத்தீன்
BROILER STARTER, BROILER FINISHER
மற்றும்.........
பிண்ணாக்கு, தவிடு, கோது, சோளம், மீன்தூள், எள்ளுப்பிண்ணாக்கு, சீமெந்து,
கால்நடைமருந்து வகைகளும்
மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்குமிடம்:

SYMBOL OF QUALITY MGM

**M. G. M. FORAGE STORES**

இல. 208, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்,
(முதலாம் குறுக்குத்தெரு சந்தி)
தொலைபேசி: 22611
தொலைபேசி மூலம் ஓடர்கள் எடுக்கப்படும்.
(498)

## EUROLANKA TRAVELS LTD.

உலகெங்கிலுமிருந்து இலங்கைக்கு வரும் உல்லாசப் பிரயாணிகளுக்கு மிகுந்த சேவை அளித்து கொழும்பில் முன்னணியில் நிற்கும் எமது ஸ்தாபனம் இப்பொழுது யாழ். மக்களுக்கும் சேவை புரிய முன்வந்துள்ளது.

**கொழும்பு–பேர்லின (BERLIN)**

மற்றும் உலகின் சகல பாகங்களிற்கும் மிகவும் குறைந்த விலையுடன் விமான டிக்கட்டுகள்.

**எங்கள் சேவைகளின் விபரம்:**

(I) கொழும்பில் ஒருநாள் தங்குவதற்கு இலவச வசதிகள்.
(II) பிரயாணக் காசோலை (Travellers Cheque)எடுத்துக் கொடுப்பதற்கான இலவச சேவை.
(III) கொழும்பிலிருந்து விமான நிலையத்திற்கு செல்வதற்கு இலவச போக்குவரத்துச் சேவை.

வடபகுதி மக்களின் வசதிக்காக, தற்காலிகமாக ஒரு கிழமைக்கு கொழும்பிலிருந்து யாழ். நகர் வந்திருக்கும் எமது பிரதிநிதியை கீழ்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.

யாழ். நகரில் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:
P. SHANMUGARAJAH
40, 3rd Cross Street, Jaffna.

கொழும்பில் தொடர்புகொள்ளவேண்டிய தலைமை அலுவலகத்தின் முகவரி:

**Eurolanka Travels Ltd.,**
6 A, Daisyvilla Avenue, Colombo-4.
தொலைபேசி: 585990

கிளை: **Eurolanka Travels Ltd.,**
8th, Floor, PAUL VI CENTRE,
Front Street, Colombo 11. தொலைபேசி: 549495
711

● நவீன ராணுவம் ● வெளிநாட்டுக்கொள்கையில் மாற்றமில்லை

# இந்தியாவின் ஒருமைப்பாடு நிலையானது:

# எந்த சக்தியாலும் பிரிக்கமுடியாது!

## பிரதமர் ரஜீவ் கொள்கை விளக்க உரை

(புதுடில்லி)

''மகாத்மா காந்தி எமது பாரத நாட்டுக்கு சுதந்திரம் பெற்றுத் தந்து புத்துயிர் அளித்தார். அன்பு, உண்மை, அகிம்சை ஆகிய உயர்ந்த பண்புகளை அவர் வழங்கிச் சென்ருர். ஜவஹர்லால்நேரு அரசியலுடன் தொழில் நுட்பம் கலந்த ஜனநாயக சோசலிச மதசார்பற்ற கூட்டுச்சேராக் கொள்கை கொண்ட இந்தியாவுக்கான அடிக்கல்லை நாட்டினுர். இந்த கொள்கைகளின் அடிப்படையில் திருமதி இந்திரா காந்தி நாட்டினை பொருளாதார ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் வளர்த்துச் சென்ருர்'' என்று இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ் காந்தி வானொலியிலும், தொலைக்காட்சியிலும் நாட்டு மக்களுக்கு நேற்றுமுன்தினம் ஆற்றிய முதலாவது கொள்கை விளக்க உரையில் தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்துள்ளதாவது ''மறைந்த பிரதமர் திருமதி இந்திரா காந்தி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கையாண்ட அதே கொள்கையின் அடிப்படையில் நான் ஒன்றுபட்ட உறுதியான, வலுவான, வளமிக்க இந்தியாவை உருவாக்க முனைவேன என்ற உறுதியை உங்களுக்கு அளிக்கிறேன்.

ஒற்றுமை, ஒருமைப்பாட்டை தவிர இந்தியாவுக்கு முக்கியமானது எதுவுமில்லை. அது பொறுமையை விட மேலானது இந்தியா பிரிக்க முடியாதது. மதசார்பின்மை அதன் அடிப்படை எந்த மதமும் மதவெறியை போதிக்கவில்லை. நாட்டுக்கு வெளியேயும், உள்ளேயும் காணப்படும் சிலதீய சக்திகள் நாட்டில் மதவெறி என்ற போர்வையில் வன்முறைகளை தூண்டி நாட்டினை பிரிக்க முயற்சி செய்கின்றனர். மத ஒற்றுமை கொண்ட சக்திகளும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் இந்த சக்தியினரின் முயற்சிகளை முறியடிக்கும். அனைவருக்கும் உரியதான இந்தியா செழித்தோங்க எல்லா மக்களும் முன்வரவேண்டும்

வறுமையை நாட்டிலிருந்து அகற்றுவதே எமது முக்கிய பணியாகும். ஏழை மற்றும் எளிய பிரிவினரின் நலன்களை காக்க நான் பாரிய திட்டங்களை மேற்கொள்வேன் இந்த மக்களின் முன்னேற்றத்தில் தான் இந்தியாவின் வளர்ச்சியே தங்கியுள்ளது

திருமதி இந்திரா காந்தியின் கடந்த ஐந்தாண்டு கால வளர்ச்சியில் நாடு உணவுஉற்பத்தி, கைத்தொழில் துறைகளில் துரித முன்னேற்றம் கண்டது. சர்வதேச ரீதியில் உலக நாடுகளுடன் ஒப்பிடும் அளவுக்கு இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி கண்டது. இந்தத்திட்டங்களை தொடர்ந்து கடைப்பிடிப்பதோடு சமதர்மத்துடன் கூடிய திட்டங்களையும் நடைமுறைப் படுத்துவேன், இவற்றுடன் புதிய விஞ்ஞானக் கொள்கைகளின் பால் அமைந்த பொருளாதாரத் திட்டங்களை செயற்படுத்தி உயர்ந்த பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவோம். இந்திராவின் 20 அம்சத் திட்டம் தீவிரத்துடன் செயல் படுத்தப் படும். ஊழல் பேர் வழிகளுக்கும், சுரண்டல் காரர்களுக்கும் சோம்பேறிகளுக்கும் இங்கு இடமல்லை.

காலணியாதிக்கம் எந்த உருவில் வந்தாலும் இந்தியா அதனை எதிர்த்துப் போராடும் ஐ. நாடுகள், அணிசேராக் கொள்கை என்பவற்றை இந்தியா தொடர்ந்து பின்பற்றும். சர்வதேச பொருளாதார ஏற்றத்தாழ்வைகுறைக்கவும் புதிய உலகப் பொருளாதார அமைப்பை ஏற்படுத்தவும் இந்தியா முயற்சி செய்யும்.

இந்தியாவின் பாதுகாப்புக்கு இப்போதைய இராணுவம் போதுமானது. ஆயினும் மேலதிக தேவை கருதி 'நவீன இராணுவம்' ஒன்று அமைக்கப்படும்.

சோவியத் யூனியனுடன் நாம் கொண்டுள்ள உறவில் மாற்றம் ஏற்படாது. இருநாடுகளின் பரந்த பல்லாண்டு உறவு தொடர்ந்து பேணப் படும். ஆபத்து நேரத்தில் உதவிக் கரம் நீட்டும் நாடு அதுவாகும். சீனவுடன் உறவுகளை மேம்படுத்த முயல்வோம். பாகிஸ்தானிலும், இந்துமா சமுத்திரத்திலும் நவீன ஆயுதங்கள் குவிக்கப்படுவதினை நாம் எதிர்க்கின்ரேம். ஆயினும் பாகிஸ்தானுடன் கூட்டுறவின் அடிப்படையில் அமைந்த உறவுகளை விரும்புகின்ரேம். அணு ஆயுதப் பெருக்கத்தை நாம் முழுமையாக எதிர்ப்போம் என்றும் அவர் தெரிவித்தார். [சூ]

## ரஜீவ் சமாளிப்பார்

### சீன அரசசெய்தி கூறுகிறது

பீக்கிங், நவ 13

''இந்தியாவின் புதிய பிரதமர் திரு ரஜீவ் காந்தி தமது நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையை சரியான முறையில் கையாண்டு மிகவும் வெற்றிகரமாக கட்டுப்படுத்தியுள்ளார்'' என்று சீனவின் அரச செய்தித்தாபனம் கருத்துதெரிவித்துள்ளது

இதன்மூலம் திரு ரஜீவ் காந்தி நாட்டு மக்களின் நம்பிகைக்குரியவராக மாறிவிட்டார். இவரது தலைமையின் கீழ் நாட்டின் மொத்தநிலமை திருப்தியாக காணப்படுகின்றது என்றும் அச் செய்தி மேலும் தெரிவித்தது.

சீனவும், இந்தியாவும் மிகவும் கருத்து வேற்றுமை கொண்ட இரு நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது [சூ]


பற் சுகாதார வாரம்
நவம்பர் 12-18
பலமான, நலமான பற்களே குழந்தையின் குன்றுத செல்வம்.

பற் சுகாதார வாரம் நாடெங்குமுள்ள நூற்றுக் கணக்கான பாடசாலைகள் பங்கு பெறும் விதத்தில், உங்கள் குழந்தைகள் பலமான, நலமான பற்களைத் தம் குன்றுத செல்வமாக அடையச் செய்யும் நோக்கத்துடன் ஒழுங்கு செய்யப் பட்டுள்ள மாபெரும் முயற்சி.

நிகழ்ச்சி நிரலில் இடம் பெறும் அம்சங்கள்:

- பாடசாலைகளில் அறிவூட்டல் வகுப்புகள், போட்டிகள்.
- பாடசாலைப் பற் சிகிச்சை நிலையங்களில் சிறுவர்க்கான பரிசோதனைகள், சிகிச்சைகள்.
- தொலைக் காட்சி நிகழ்ச்சிகள், சுவரொட்டிகள், பிரசுரங்கள், பத்திரிகைகள், ரேடியோ மூலம் பற் பாதுகாப்புப் பற்றிய பெறுமதியான அறிவூட்டல்கள்.


இந்த வாரம் வெற்றி பெற எம்முடன் ஒத்துழையுங்கள். உங்கள் குழந்தைகளின் பற் பராமரிப்புக்குத் திட்டமான வரைமுறை ஒன்றை இன்றே வகுத்துக் கொள்ளுங்கள்.



நடத்துவோர்:
இலங்கைச் சிறுவர் பல் வைத்திய வித்தியா சங்கம்.
சிறுவர் செயலவை.
இலங்கை ஜேய்சீஸ்.

TAL

புளோரைட் கொண்ட
சிக்னல் 2
பற்களைக் கெட்டிப்படுத்திப் பற் சிதைவைக் கட்டுப்படுத்தும்




விலைகள்:-
சிக்கன அளவு - 15.20
பெரியது - 9.85
நடுத்தர அளவு- 7.05

### மணிவாக்கு

''பாவத்தைப் பகை, பாவியைப் பகையாதே'' என்னும் உபதேசத்தை அறிந்து கொள்ளுதல் மிக எளிது. ஆனால் நடைமுறையில் அதனைக் கடைப்பிடித்தல் மிக அரிதாயிருக்கிறது. பகைமை என்னும் நஞ்சு உலகில் பரவுவதற்குக் காரணம் இது தான்.

— மகாத்மா காந்தி

## நமது நோக்கு

# அணிசேராச் சித்தாந்தம்

'ஒரு படையின் தலைவனைக் கைப்பற்றலாம். ஆனால் எந்த ஒரு படை வீரனின் மனத்திட்பத்தை பறித்துவிட முடியாது' என்று சீனத்தத்துவமேதை கொன் பூஷியஸ் சொல்லியிருக்கிறார்.

இன்று அரசியலிலும் பொருளாதாரத்திலும் அதிகாரத்தை எவ்வாறு தனதாக்கி கொள்ளலாம் என்ற பேரவா நாடுகளை மட்டுமல்ல நாட்டின் அரசியல் கட்சிகளையும் பீடித்திருக்கிறது.

இந்தப் பேராசை மேலே கூறப்பட்ட உண்மையை மறைத்து விடுகிறது.

கடந்த வருட ஆடிக்கலவரத்தில் இந்த நாடு என்ன செய்வதென்று தெரியாது தத்தளிக்கும் போது அண்டை நாடாகிய இந்தியாவைப் புறக்கணித்து வேற்று நாட்டு உதவியை நாடியதென்றகுற்றச்சாட்டு ஆட்சி மேல் செலுத்தப்பட்டது.

இதனை அறிந்த காலம் சென்ற இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிற்கு திட்டவட்டமாகக் கூறியதை இந்திய லோகசபையில் வெளியிட்டிருந்தார்.

''எவ்விதஅந்நியநாட்டின் தலையீடும் இன்று இலங்கையில் உருவான கொந்தளிப்பில் பெரும் சிக்கலை ஏற்படுத்தும்; இந்தப் பிராந்தியத்தில் எங்கள் நாடுகளின் ஆட்சியை நிலைகுலைத்துவிடும் சக்திகள் நடமாடுகின்றன; இலங்கையில் ஏற்படும் மாற்றங்கள் இந்தியாவைப் பாதிக்கும். எனவே இந்தியா ஒரு அந்நிய நாடு என்ற ரீதியில் பாதகமானது எதனையும் செய்துவிடாதீர்கள்.''

சுமார் ஒருவருடம் மூன்று மாதங்களுக்குப் பின் இக்கூற்றைப் பற்றிக் குறிப்பிடும்போது ஓர் ஒரு மாற்றத்தையே காண்கின்றோம். இப்பேச்சாளர் இன்று இல்லை. அது பெரும்குறை, ஆனால் பேச்சின் வீறு குறைந்துவிட்டதாகக் கொள்ளலாமா?

இந்தஉண்மைக்கு உழைக்கும் படை (ராணுவமல்ல) ஒன்றிருந்தால்அதன்படைத் தலைவர் மறைந்துவிட்டாரென்றகாரணத்தால் அதன் பணியைக் கைவிடலாமா? கைவிட்டுவிடுமா? இந்திரா இல்லாதஇந்தியா காந்தியை இலகுவில் மறந்துவிடுமா?

இல்லை என்று சொல்வதற்கு தத்துவ ஞானமோ அரசியல் நிபுணத்துவமோ அவசியமில்லை; ஒரு சாதாரண குடும்பத்தின் தலைவர் சடுதியில் மறைந்துவிட்டால், குடும்பம் தலையெடுக்காது என்றுவாதாடலாமா? விதவைகளின் வெற்றி வரலாறு தினசரி அனுபவம்.

எனவே மறைந்த இந்தியப் பிரதமர் மறைமுகமாகக் குறிப்பிட்டதென்னவென்பது இலங்கை ஜனாதிபதிக்கோ அல்லது இந்திய இலங்கை மக்களுக்கோ தெரியாததல்ல அதனை வஞ்சிக்கும் எந்த நடவடிக்கையும் இந்தப் பிராந்தியத்திற்கு அமைதியை அளிக்காது.

இந்தியாவைச் சுற்றிவளைத்துத் (balkanize) தனிக்கப்பிடிக்க வேண்டுமென்று ஒரு சதி நிகழ்வதாக அடிக்கடி இந்திரா கூறிவந்தார்; அவருடைய அரசியல் எதிரிகள் இதெல்லாம் தேர்தல் திருகுதாளம் என்று சொல்லிவந்தனர். அவர்கள் நாட்டின் வருங்காலத்தை தூரநோக்கிப் பார்க்கும் ஆற்றல் அற்றவர்.

இன்று இந்திரா தமது உயிரையே அர்ப்பணித்ததின் அர்த்தம் ஆழமானது; அதனை நாம் அறிந்து விட்டோமென்று பெருமைபேசவில்லை. அதனை அறியமுயல்வதில் வாசகர்களை ஊக்குவிப்பதே எமது தனி நோக்கம். சீக்கியர் கொன்றுவிட்டாரென்று சிம்பிளாகச் சொல்லிவிடலாகாது.

தந்தை நேருவின் மந்திரத்தை நன்கு அறிந்தவர் தவப்புதல்வி இந்திரா. வறிய நாடுகளுக்கு, ஆசிய, ஆபிரிக்க கண்டங்களில் சுதந்திரம் பெற்ற, சுதந்திரத்துக்காகபோராடும் நாடுகளுக்கு அமெரிக்க, ஐரோப்பிய நாகரிக நாடுகள் அதிகம் உதவமாட்டா. உலகிற்கு பெரிதும் உதவக்கூடிய செல்வம் கொழிக்கும் அமெரிக்காவும் கம்யூனிஸ்ட் ரஷ்யாவும் வருங்கால உலகின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிக்க வல்லவை. ஆனால் அவ்விருநாடுகளின்பகைமை வளரும் சாத்தியம் இன்று அதிகரித்திருக்கிறது; இப்பகைமையில்சிக்குண்டுதவிக்காமல் தனித்துவம் பெற்ற மண்டல சார்பற்ற குழுவே மூன்றும் உலக நாடுகள் உய்யும் வழி என்பது நேருவின் உறுதியானகொள்கை. அவரின் தீர்க்க தரிசனம் என்றும் சொல்லலாம்.

இதனைக் கடைப்பிடிப்பது கடந்த 20 ஆண்டு காலம் உலகம் கண்ட மாற்றத்தில் எவ்வளவு கடினமாயிருந்ததென்பதை உலக விடயங்களை ஊன்றிப் படிப்போர் அவதானித்திருப்பார்கள். பாகிஸ்தானுடன் மூன்று தடவை போர்செய்த இந்தியாவுக்கு — குறிப்பாக பங்களாதேஷ் போரில்— எத்துணை சாமார்த்தியம் தேவைப்பட்டதை அதன் அணிசேராக் கொள்கை விளக்கியது.

கிழக்கில் இருபெரும்நாடுகளான சீனாவும் இந்தியாவும் தத்தம்வழிகளில் விரைவாக வளர்ச்சியடைவதால் ஆன்மீகபலத்தால் உலகுக்கு வழிகாட்டிய ஆசியக்கண்டம் மீண்டும் தன் பெருமையை நிலைநாட்ட முடியுமென்பது நேருவின் கனவு.

அதில் ஏற்பட்ட சங்கடத்தைச் சமாளித்து ரஷ்யாவின் ஆதரவைநாடிஅதேசமயம் அமெரிக்காவுடனோ சீனாவுடனோ பகைக்காமல் நட்பை வளர்க்க முயன்ற இந்திரா இந்தியாவின் செல்வாக்கையும் அதன்மூலம் மண்டல சார்பற்ற கொள்கையின் பலத்தையும் பெருமளவிற்கு உறுதிப்படுத்திவிட்டார்.

# நேருவின் 96 வது பிறந்ததினம்:

# மாந்தருள் மாணிக்கம்

**1889-ம்** ஆண்டு நவம்பர் 14-ம் திகதி இந்தியாவின் அலகாபாத் நகரில் ஜவஹர்லால் நேரு பிறந்தார். அவர் பிறந்தபோது இந்திய தேசிய காங்கிரசுக்கு நான்கு வயது.

இளமைப் பராயத்திலேயே ஆங்கிலத் தாதிகளால் கல்வி புகட்டப்பட்டு, இங்கிலாந்து ஹாரோ பள்ளியிலும், கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலும் பயின்று, சிட்னிவெப், பீட்ரிஸ்வெப் போன்ற சிந்தனையாளர்களின் எண்ணங்களில் மூழ்கித்திளைத்து, பிரிட்டிஷ் பாராளுமன்ற ஜனநாயகத்தால் கவரப்பட்டு, அரசியல் வாழ்க்கையின் நுழைவு வாயிலில் ஜவஹர்லால் நேரு அடியெடுத்துவைத்தார்.

தர்மம் வீட்டிலேதான் ஆரம்பமாகவேண்டுமென்பதைப்போல சர்வதேச உணர்வும் தேசிய உணர்வின் அடிப்படையில்தான் பிறக்கமுடியுமென்ற அசையாத நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது,

### காந்திஜியின் வாரிசு

வரலாற்றுப்பூர்வமாகவே காந்திஜியின் வாரிசாக உருவாகிக்கொண்டிருந்தவர்கள் இருவர். அந்த இருவரும் அவருடைய இரு கண்களாகவே காந்திஜியால் கருதப்பட்டவர்கள். ஒருவர் ஜவஹர்லால் நேரு, மற்றொருவர் சுபாஷ் சந்திரபோஸ். ஆனந்தபவனத்தில் ஆடம்பர வாழ்க்கையை



ஆசியஜோதி நேருவும் அருமை மகள் இந்திராவும் குழந்தைகளுடன் குதூகலிக்கும் காட்சி.

நேருஜி துறந்து, கடுமையும், கஷ்டங்களும் நிறைந்த அரசியல் வாழ்க்கையை மேற்கொண்டார்.

நேருஜியின் எண்ணமும் செயலும், பண்பும் பரிவும், பொதுவாழ்க்கை ஒழுக்கமும் காந்திஜியைக் கவர்ந்தன.

மக்களை ஒருமுகப்படுத்தி புரட்சிச் செயல்களில் ஈடுபடுத்துவதைவிட, அவர்களை ஒரு சமுதாயமாக்கி, அரசியல் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி, ஜனநாயக, மனோபாவம் கொள்ளச்செய்வது பயனுள்ள ஆக்கரீதியான பணி என்பது நேருஜியின் நம்பிக்கை.

உலகத்திலேயே மிகப்பெரிய ஜனநாயகத்தை உருவாக்கிய பெருமைக்குரியவர் நேருஜி. இந்திய ஜனநாயகம் இன்று செயல்பட்டுவரும் முறையும், புரிந்துள்ள சாதனைகளும் நேருஜியின் ஜனநாயக நம்பிக்கை எவ்வளவு சரியானது என்பதற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாகும். ஜனநாயக அமைப்பின் குறைபாடுகளையும், பலவீனங்களையும் சரியானபடி நேருஜி உணர்ந்து வைத்திருந்தார்.

### வெற்றி

பாராளுமன்ற ஜனநாயகத்தில் அசையாத நம்பிக்கையும், சோஷலிச சித்தாந்தத்தில் பற்றும், தனிநபர் சுதந்திரத்தைப் பேணுவதில் அக்கறையும் கொண்டுள்ள நேருஜி, உலகின் மிகப்பெரிய ஜனநாயகவாதிகள் எனப் போற்றப்படும் ஜெஃபர்சன், ஆபிரகாம்லிங்கன் போன்றோரின் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர். ஒரே ஒரு மாறுபாடு: அவர்கள் சோஷலிச சித்தாந்திகள் அல்ல. சோஷலிச சித்தாந்தி என்கிற தன்மையில் நேருஜி அவர்களைவிட உயர்ந்துள்ளார். ஜனநாயக சோஷலிசவாதியான நேருஜி இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற புருஷர். அவருடைய சோஷலிசக் கோட்பாடுகள் மனித குலத்தின் எதிர்காலத்தில்நம்பிக்கை வைத்துள்ள அனைவராலும் பரிசீலிக்கப்படத்தக்கவை.

1947-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் திகதி இந்தியா சுதந்திரம் பெற்றது. ஜவஹர்லால் நேரு சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமரானார். 1950-ம் ஆண்டு ஜனவரிமாதம் 26-ம் திகதி இந்தியா குடியரசாக மாறியது. நேருஜியே

(5ம் பக்கம் 1ம் கலம் பார்க்க)

வரலாற்றுக் கண்ணோட்டம் என்பது நேருவிடம் இயற்கையாகவே அமைந்துவிட்ட சுபாவமாகியிருந்தது. உலகத்தின் தலைவிதியை நிர்ணயிப்பதில் இந்தியாவின் பங்கு கணிசமானது என அவர் மனதார நம்பினார் புராணஇதிகாசகாலத்திலிருந்து இன்றுவரை இழைபிசகாமல் வந்திருக்கும் சரித்திரப் பாரம்பரியம் கொண்டு ஒரு மாபெரும் சமுதாயத்தின் சக்திகளை அவர் திரும்பக் கடைப்பிடிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளின் விளைவாகப் பிறந்ததே 'டிஸ்கவரி ஆப் இன்டியா' என்ற அவருடைய ஒப்பற்ற வரலாற்று விமர்சன நூல்.

### விடுதலைப்போரில் ஈடுபாடு

இந்திய தேசியம் இந்தியப் பண்படு என்ற மண்ணிலே உறுதியாக வேர்பிடித்தால்தான், உலகப் பொதுமை என்ற நிலைக்கு உயரமுடியும் எனக் கண்ட அவர், சர்வதேசிய சாதனைகளுக்கு இந்திய நாட்டின் விடுதலையை முதல் கட்டமாக எண்ணினார். உலக நாடுகளோடு ஒத்த உரிமை வாழ்வைப் பாரதம் பெறும் வரையில், எந்த இந்தியக் குடிமகன் காணும் மனிதாபிமானக் கனவும் வெறும் கனவாகத்தான் இருக்கமுடியும் என உணர்ந்த நேரு, இந்திய விடுதலைப்போரில் தன்னை முற்றுமுழுதாக ஈடுபடுத்திக் கொண்டார்.

### பாரின் ஒளிவிளக்கு

காரிருள் வந்து சூழ்ந்ததோ
பேரருள் உனை மறந்ததோ
வீரமே ஏன் ஒளிந்ததோ
கோரமே இனி வாழ்வதோ.

பாரதம் செய் நனிதவமே
பாரதின் ஒளி விளக்கே
மேருவின் தனி வீரமே
யாருனை இனி மறப்பரே!

கருணை
நல்லூர்.

## இன்று பணிமனைத் திறப்புவிழா

# கோப்பாய் கல்விமூலவள நிலையம்

கல்வி அமைச்சினால் 1980 ம் ஆண்டில் சகல கல்வி வட்டாரங்களிலும் கற்றலுக்கும் அபிருத்திக்குமான மூலவள நிலையங்கள் உருவாக்கப்பட்டன. யாழ். மாவட்டத்தில் உள்ள கல்வி வட்டாரங்களில் கல்வி மூலவள நிலையங்கள் உருவாக்கப்பட்ட போது கல்வி அமைச்சு யாழ். மாவட்டத்திற்கு ஒரு வட்டாரத்தில் கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கியது. அப்பொழுது யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளராகஇருந்த திரு. ரி. மாணிக்கவாசகரது பெரு முயற்சியினால் கோப்பாய் கல்வி வட்டாரத்தின்மத்தியில் இருக்கும் புத்தூர் ஸ்ரீசோமஸ் கந்தக் கல்லூரியில் 80'x20' அளவிலான கட்டடம் கட்டப்பட்டது. திரு. ரி மாணிக்கவாசகர் அவர்கள் வள்ளல் மழவராயர் பரம்பரையினர் மட்டுமல்லாது சோமஸ் கந்தா கல்லூரி நம்பிக்கை நிதியத்து பாதுகாவலர்களில் ஒருவருமென்ற காரணத்தால் அங்கு கல்வி மூலவள நிலையம் அமைவதற்கு நிலம் ஒதுக்குவதில் சிரமம் ஏற்படவில்லை.

கல்வி மூலவள நிலையத்திற்கு யான் பொறுப்பதிகாரியாக 1-2-82 ல் நியமிக்கப்பட்டேன். அன்றிலிருந்து இந்நிலையம் க. பொ. த சாதாரண) வகுப்பு மாணவர்களுக்கும், க பொ த(உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கும் அவ்வப்போது கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றது.

கோப்பாய் கல்வி மூலவள நிலையம் 83 ம் ஆண்டு மார்ச் 20 ந்திகதி யாழ் றோட்டரிக் கழகத்தின் அனுசரணையுடன் மாணவர்களுக்கான இலவச மருத்துவ சேவையை நடத்தியது. அதே போன்று இந்த வருடமும் றோட்டறிக் கழகத்தோடு இணைந்து இலவச மருத்துவ சேவையை அளித்தது 1983 ம்ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தில் அப்போதய கோப்பாய் பராளுமன்ற உறுப்பினர் திரு. மு. ஆலாலசுந்தரம் அவர்கள் மனமுவந்து இருபதினாயிரம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்ததனால் நூறு விரிவுரை மண்டபக் கதிரைகளும் காரியாலய மேசையும் செய்யப்பட்டது. பண்ணிசை சங்கீதம் போன்ற பாடநெறிகளுக்கும் கருத்தரங்குகள் ஒழுங்கு செய்து மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஊக்கம் அளித்தது. யாழ். மாவட்டப் பண்ணிசைப் போட்டிக்கான திருமுறைகளை யாழ் கல்வித்திணைக்களம் வெளியிடுவதற்கு தயாரித்துக் கொடுத்ததும் இந் நிலையமே,

(5-ம் பக்கம் 3-ம் கலம்பார்க்க)

# நேருவின் 96-வது பிறந்ததினம்

(4-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

பிரதமர் பதவியை வகித்தார். நேருஜி பிரதமராக விருந்து நாட்டைச் சுபிட்சப் பாதைக்கு இட்டுச்சென்ருர்.

### இந்திரா இரத்தம் வழங்கினர்

உழைப்பை என்றும் போற்றுபவர் நேருஜி. இவர் தினம் பதினறு அல்லது பதினெட்டு மணி நேரம் உழைப்பார் கடும் உழைப்பினல் இவரின் உடல் நிலை 1964-ம் ஆண்டு மே மாதம் 26-ம் திகதி மிகவும் சீர்கேடுற்றது. இவரை பரிசோதித்த டாக்டர்கள் இரத்தம் செலுத்தவேண்டுமென்ருனர். உடனே நேருஜின் தவப்புதல்வி இந்திராகாந்தி தனது இரத்தத்தைக் கொடுத்தார்.

இந்தியாவின் விடுதலைக்காகப் பலமுறை சிறைசென்று தனது வாழ்நாளையே அர்ப்பணித்த பிரதமர் பண்டித ஜவஹர்லால்நேரு 1964-ம் ஆண்டு மே மாதம் 27-ம் திகதி அமரரானர்.

நேருஜியை இரண்டு நிலைகளிலிருந்து விமர்சிக்கவேண்டிய கட்டாயம் அவரைப்பற்றி எழுதுவோர் அனைவருக்கும் உண்டு.

தேசியப் பின்னணியில் அவரை விமர்சிப்பது ஒரு நிலை. சர்வதேசப் பின்னணியில் விமர்சிப்பது மற்றுமொருநிலை. தேசியப் பின்னணியில் அவரின் குறைகளாகக் கருதப்படுகின்றவைகளும், சர்வதேசப் பின்னணியில் பார்க்கும்போது அவருடைய பெருமைகளாகவே மலர்ந்து கம்பீரம் பெறுகின்றன. அணுசகாப்தத்தில் உலக அழிவுப் பயங்கரத்திலிருந்து தப்பிவாழ, தேசியநலன் கடந்த பெரியதலைவனை சர்வதேசத் தேவைதேடி அழைத்தது. அந்தத் தேவைக்கு விருப்பத்தோடு, தேசியத் தியாக உணர்வோடு, குரல்கொடுக்க மகாபுருஷர் நேருஜி அலகாபாத் நகரம் பெற்றெடுத்த குழந்தை அந்த தேவையினைப் பூர்த்தி செய்வதற்காகவே வளர்ந்து அரசியல் பிரவேசமும் செய்தது. அந்தப்பணிக்காகவே மாபெரும் அஹிம்சாவாதி காந்தியினல் பயிற்சியும் அளிக்கப்பட்டது மேற்கில் பெற்ற பொருளியல் அறிவும், கிழக்கில் பெற்ற ஆன்மீக உணர்வும் அமைதி ஞானமாக உருப்பெற்று, அக்குழந்தை வளர்ந்து அரசியல் பலம் பெற்றபோது, உலக சமாதானத்தின் ஒப்பற்ற சக்தியாகத் திகழ்ந்தது.

நேருஜியின் பெருமைகளை அளந்தறிய செய்யப்படும் முயற்சிகள், உலகம் உள்ள அளவும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். அணுசகாப்தத்தின் அழிவு அபாயத்திலிருந்து மனித இனத்தைக்காப்பாற்ற அந்தப் பெருமகன் செய்த முயற்சிகள் உலக மக்களின் நன்றியுணர்ச்சிக்கு என்றும் இலக்காகவே இருக்கும்.

பிறப்பால் இந்தியராக விளங்கியநேரு, எண்ணத்தால் உலகப் பெருமகனுகத் திகழ்ந்து செயலால் மனிதாபிமானப் பேராளராக விளங்கி மாண்டபோது உலகம் பேரிழப்பு என ஒருமித்துக் கண்ணீர்சிந்த வாழ்ந்த மாமேதை அவர்.

புத்தருக்கும் காந்திக்கும் பிறகு இந்தியாகண்ட மிகப் பெரிய ஞானச்சுடரொளி நேரு [illegible]ாகனுக்கும் அக்பருக்கும் பிறகு இந்தியாகண்ட மிகப் பெரிய அரசியல் தீர்க்கதரிசி நேரு.

இந்தியப் பண்பாட்டின் வடிவெடுத்த சாரத்தின் நடமாடும் உருவமாக விளங்கியவர் நேரு இந்தியாவை மீண்டும் கண்டுபிடித்து 'டிஸ்கவரி ஆஃப் இண்டியா' என்ற ஒப்பற்ற நூலை அவர் எழுதினர் ஆனல் இந்தியா அந்த மனிதரிடம் இழந்துபோன தனது ஆத்மாவை மீண்டும் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டது நேருஜியால்?

கேள்வி சிறியது. ஆனல் அதற்கான விடைகாணும் முயற்சி மாபெரும் தொடர் கதையாகவே இருக்கும்.

''அவருடைய பெருமை முழுமையாக உணரப்பட்டு விட்ட தாக நான் நம்பவில்லை. இந்த மனிதசமுதாயம்நீடித்து வாழ அனுமதிக்கப்படுமானல், அவருடையபெருமைக் கேற்ற வகையில் அவருக்கு அங்கீகாரம் கிடைக்கும் என்பது உறுதி'' என்கிருர் பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல்.

ஆம், மனித சமுதாயம் தொடர்ந்து வாழ அனுமதிக்கப்படுமானல், நேருஜியின் கனவுகள் கட்டாயம் நனவாகும். அவை நனவாகும் போது அவர் பெறப்போகும் அங்கீகாரமும் தவிர்க்க முடியாதது ஆகிவிடும்.

மனித இனத்துக்கே சொந்தமாகிவிட்ட அவர் என்றென்றும் பசுமை மாருமல் கட்டாயம் வாழ்ந்திருப்பார்.

### இலங்கை விஜயம்

இலங்கையில் நேரு 1931ல் ஒருசிறு கோடைகால விடுதலையை மனைவி கமலாவுடனும், மகள் இந்திராவுடனும் கழித்தார் அன்று இந்திராவின் வயது பதின்மூன்று ஆனலும் மிகத்துரிதமான, ஆளுமையுடைய பெண்மணியென யாழ்ப்பாணம் கணித்தது.

## ஆயுதப்படையின்...

(1ம் பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

கிளிநொச்சி நகரில் வந்த வாகனங்களையெல்லாம் நிறுத்தி, ராணுவத்தினர் சோதனையிட்டதைத் தொடர்ந்து பெரும் பரபரப்பு ஏற்பட்டது. ஐநூறுக்குமேலான வாலிபர்கள் கைதாகி, ஜெரூட்றிகோ மைதானத்துக்கு ராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டனர் அங்கு தடுத்து வைத்துச் சோதனை செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி தபால் நிலையத்தைச்சுற்றி குறிப்பிட்ட ஒரு நேரத்தில் மக்கள் சிதறி ஓடினர்.

சில இளைஞர்கள் தாக்குதலுக்குக்குள்ளாகி, உயிருடன் மின்கம்பத்தில் கட்டி வைக்கப்பட்டதாகக் சொல்லப்படுகிறது.

கிளிநொச்சியில் துப்பாக்கி வேட்டுகள் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருந்தது.

ஸ்கந்தபுரத்தில் 'ஈ. எல் எவ்' வானில் வந்த சீருடையினர் கடையொன்றை தீயிட்டுக் கொளுத்தினர். அவ்வீதியால் வந்தவர்களும் தாக்கப்பட்டனர். இங்குள்ள அண்ணு சிலையும் உடைக்கப்பட்டிருந்தது.

சுமார் 20 இளைஞர்கள்வரை கைதுசெய்யப்பட்டு, கயிற்றினல் கைகளைப் பிணைத்துக் கட்டி அந்த வானில் கிளிநொச்சிக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

இந்த இளைஞர்களில் சிலர் விசாரணையின் விடுவிக்கப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது

அதே வேளைஸ்கந்த புரத்தில் நேற்று முன்தினம் சரமாரியான துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டதாகவும் கூறப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ந்தும் பதட்ட நிலை நிலவிவருகிறது.

கிநொச்சியில் மயான அமைதி நிலவுகிறது.

## வேம்படி...

(1ம்பக்கம் 5ம்கலத்தொடர்ச்சி)

ருந்தபோது கவச வாகனத்தில் ரோந்துசுற்றிவந்த ஆயுதப் படையினர்களால் திரவம் தெளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆசிரியைகளான திருமதி அரசரத்தினம், திருமதி மருதலிங்கம் ஆகியோரும், கோண்டாவிலைச் சேர்ந்த உயர்வகுப்பு மாணவியும் கல்லூரிக்கு வந்து கொண்டிருந்தபோது அவர்களைக் கடந்துசென்ற கவச வண்டியிலிருந்து அவர்களை நோக்கி திரவமொன்று வீசப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மாணவியின் முகத்திலும், கண்களிலும், உடையிலும் அத்திரவம் பட்டதால் அவர் துடிதுடித்துக் கண்கள் எரிவதாகக் குளறியதாகவும், பின்னர் அவர் கல்லூரிக்குக் கொண்டு செல்லப்பட்டு யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டதாகவும், டாக்டர்கள் கண்களைப் பரிசோதித்து சிகிச்சையளித்ததாகவும் கூறப்படுகிறது. கண்கள் சிவத்துக் காணப்பட்டதாகவும், சிகிச்சைக்குப் பின் அவர் கல்லூரி திரும்பியதாகவும் கூறப்படுகிறது. ஆசிரியைகளின் சேலைமீது த்திரவம் பட்டதால் அவர்களுக்குப் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லையென்றும் கூறப்படுகிறது.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஏ. இராஜரத்தினம் இச்சம்பவம்பற்றி யாழ்.அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம், வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

அரசாங் அதிபர் உடனடியாக இணைப்பதிகாரி திரு. நளின் செனவிரத்னவுடன் தொடர்புகொண்டு இச்சம்பவம்பற்றித் தெரிவித்தார். தேசிய பந்தோபஸ்து அமைச்சு செயலாளர் திரு. சிறிவர்த்தனவின் கவனத்திற்கும் அரசாங்க அதிபர் இச்சம்பவத்தைக் கொண்டுவந்தார். [க]

## கல்விமூலவளநிலையம் புதிய காரியாலயம் இன்று திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கல்வி மூலவள நிலையத்திற்குப் புதிய காரியாலயம் நாற்பதினுயிரம் ரூபா செலவில் கட்டப்பட்டு இன்று திறந்துவைக்கப்பெறுகின்றது. இத்திறப்பு விழா கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ஆ. வ. தங்கராசா தலைமையில் நடைபெறுகின்றது. பிரதம விருந்தினராக யாழ். மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை கலந்துகொண்டு காரியாலயத்தைத் திறந்து வைப்பார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு. வி. சபாநாயகமும், யாழ். மாவட்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி கணேந்திரனும் கலந்து கொள்கின்றனர். யாழ் மாவட்டத்திலேயே சகல வசதிகளையும் கொண்ட விரிவுரை மண்டபம் இங்கு இருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இத்திறப்பு விழாவுக்கான சகல ஒழுங்குகளையும் கோப்பாய் கல்விமூலவளநிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ் சி எஸ். சிதம்பரநாதன் மேற்கொண்டுள்ளார்.

## ரூபவாஹினி

மாலை

| | |
|---|---|
| 5-30 | நாட்டு வடம் [தமிழ்] |
| 5-35 | 'ஹெக்கிள் அன்ட் ஜெக்கிள்' கார்ட்டூன் சித்திரம் [ஆங்கிலம்] |
| 6-00 | 'மலரும் அரும்புகள்' சிறுவர் நிகழ்ச்சி [தமிழ்] |
| 6-30 | தேகாரோக்கிய நிகழ்ச்சி [சிங்களம்] |
| 6-55 | செய்திகள் [தமிழ்] |
| 7-15 | தகவல் திணைக்கள நிகழ்ச்சி [சிங்களம்] |
| 7-45 | பொது அறிவுப் போட்டி [ஆங்கிலம்] |
| 8-15 | செய்திகள் [சிங்களம்] |
| 8-45 | 'நூற்றுக்கு நூறு' திரைப்படம் [தமிழ்] ஜெய்சங்கர், ஸ்ரீ வித்தியா, நாகேஷ்' லக்ஷ்மி நடித்தது |
| 9-30 | செய்திகள் [ஆங்கிலம்] |
| 9-50 | திரைப்படத் தொடர்ச்சி |
| 10-30 | உலகச் செய்திகள் |
| 10-35 | திரைப்படத் தொடர்ச்சி |
| 11-30 | நிகழ்ச்சிகள் முடிவு. |

## கோப்பாய்...

(4ம்பக்க 5ம் கலத் தொடர்ச்சி)

இந்த வருடத்தில் கோப்பாய் கல்வி மூலவள நிலையம் தனது பணிகளை மாணவர்களோடு, பாடசாலை விட்டு நீங்கியவர்களுக்கும் விரிவுபடுத்தியது. வருட ஆரம்பத்தில் யாழ். தேசிய கூட்டுறவுச் சபையுடன் இணைந்து ஆசிரியர்களுக்கான கூட்டுறவுக் கருத்தரங்கை நடாத்தியது. பின்னர் இலங்கை பனம் பொருள் அபிவிருத்திச் சபையுடன் இணைந்து மாணவர்கள் ஆசிரியர்களுக்கான இரண்டு நாள் கருத்தரங்கும் கண்காட்சியும் நடாத்தியது அதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் மாதத்தில் பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்து சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் பனம் பொருள் கைப்பணிப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்டது. இப்பயிற்சி நெறியில் 25 யுவதிகள் பயிற்சிபெறுகிருர்கள். இங்கு பனம் பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. க நடராசா அவர்களின் பூரண ஒத்துழைப்பைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

கோப்பாய் கல்வி மூலவள நிலையமும், திட்டம் செயற்படுத்தும் அமைச்சின் போசாக்குப் பிரிவின சார்பாக யாழ் திட்டமிடல் பணிமனையும், வலிகிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையும் இணைந்து 58 யுவதிகளுக்கு உணவுப் போசாக்கு பயிற்சி நெறியை ஆகஸ்ட் மாதத்தில் நடத்தியது. இன்னமும் அப் பயிற்சியாளர்கள் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் தாய்சேய் நலன் நிலையங்களில் தொண்டாற்றி வருவது குறிப்பிடத்தக்கதாகும். அவர்களில் ஒருபகுதியினர் அண்மையில் வேம்பிராயில் தொழுநோய் ஆய்விற்கும் உதவியுள்ளனர். இப்பயிற்சி நெறிக்கு அளப்பரிய சேவை செய்த யாழ். திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி களேந்திரனையும், திட்டமிடல் அதிகாரி திரு வி எஸ் சுவாமிநாதனையும் வலி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திருகு கிட்ணரையும் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. விஜயரத்தினத்தையும் பாராட்டவேண்டும்

யாழ் தேசிய கூட்டுறவுச் சபையுடன் சேர்ந்து செப்ரெம்பர் மாதம் தொடக்கம் விஞ்ஞான ரீதியிலான உடை தயாரிப்பு பயிற்சி நெறி நடாத்தப்படுகின்றது. இந்நெறியில் நாற்பது யுவதிகள் பயிற்சிபெறுகின்றனர். அக்டோபர் மாதம் தொடக்கம் சங்கீத, மிருதங்க வகுப்புக்கள் பாடசாலை மணவர்களுக்கு நடாத்தப்பட்டுவருகின்றது தற்பொழுது மாதர் பணியக சுயவேலைவய்ப்புப் பயிற்சி நெறியும் விரிவுரை மண்டபத்தில் நடைபெற்று வருகின்றது.

எஸ்.சி.எஸ். சிதம்பரநாதன்

பொறுப்பதிகாரி,
கோப்பாய் கல்வி மூலவள நிலையம்.

## யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படிமகளிர் கல்லூரி மாணவிக்கும் ஆசிரியை இருவருக்கும் நேற்றுக்காலை, ரோந்துசென்றவர்கள், திரவம் வீசியதை ஆட்சேபித்து, யாழ். சட்டத்தரணிகள் நேற்று நீதிமன்றங்களைப்பகிஷ்கரித்தனர். இதனல்எந்த நீதிமன்றங்களிலும் விசாரணைகள் நடைபெறவில்லை.

சம்பவத்தை நேரில்பார்த்ததாகக்கூறப்படும் சட்டத்தரணியொருவர், நேற்றுக்காலை நீதிமன்றம்வந்ததும், அங்கிருந்தமற்றும் சட்டத்தரணிகளுக்கு நடந்தவற்றைக் கூறினர்.

இதனைத்தொடர்ந்து, சட்டத்தரணிகள், நீதிமன்றங்களைவிட்டு வெளியேறினர்கள்

யாழ் நீதவான் நீதிமன்றம், யாழ் மேல்நீதிமன்றம், யாழ் மாவட்ட நீதிமன்றம் ஆகியவற்றிற்கு சட்டத்தரணிகள் செல்லாது பகிஷ்கரித்தனர். சட்டத்தரணிகள், நீதிமன்றவளவிற்குள்ளும், சட்ட நூலகத்திலும் காணப்பட்டனர்.

விசாரணைக்குவந்த கட்சிக்காரர்களும், சாட்சிகளும், விசாரணை நடைபெருததினல் திரும்பிச்சென்றனர்

சம்பவத்தை நேரில்கண்டதாகக்கூறப்படும் சட்டத்தரணி, தான்காரில், நீதிமன்றம்வந்துகொண்டிருந்தபோது எதிரில் ரோந்துசுற்றி கவசவாகனத்தில் ஆயுதப் படையினர் வந்தனரென்றும், அந்தவாகனம் சென்றதும், மாணவிஒருவர், கண்களை பொத்திக்கொண்டு 'ஐயோ ஐயோ எனக்குளறியதாகவும் தான்கீழே இறங்கி அருகில் சென்றபோது அம்மாணவி

(8ம் பக்கம 5ம்கலம் பார்க்க)


கனடா, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி செல்வதற்கான சகல ஒழுங்குகளுக்கும், BERLIN செல்ல விமானச் சீட்டுக்களை உடனடியாகப் பதிவு செய்வதற்கும்.

AIR-TRANSIT

ஏயார் ட்ரான்சிற் TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங்
2-வது மாடி, கொழும்பு-1.
போன்: 549365

538 (290) ஆஸ்பத்திரி வீதி
[ஆஸ்பத்திரி முன்பாக]
யாழ்ப்பாணம். போன்: 22689

# ப.நோ.கூ. சங்க ஊழியருக்கு நிவாரண உதவி

[யாழ்ப்பாணம்]

கைதடியில் ஆயுதப்படையினரின் துப்பாக்கிச்சூட்டுககுப் பலியானவர்களில் தென்மராட்சி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தைச் சேர்ந்த ஊழியர்கள் மூவரின் குடும்பங்களுக்கு சுன்ஞகம் ப.நோ. கூ. சங்கம் மூவாயிரம் ரூபா நிவாரண உதவியாக வழங்கியுள்ளது.

சுன்ஞகம் ப. நோ. கூ. சங்க இயக்குநர்சபைக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி இந்த நிவாரண உதவி வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக் கூட்டம் மேற்படி சங்கத்தின் இயக்குநர்சபைத் தலைவர் திரு. சி. குமாரவேல் தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஆகஸ்ட் 13ம் திகதி கைதடிச்சந்தியில் இடம்பெற்ற சம்பவத்தின்போது சுமார் 8 பேர் ஆயுதப்படையினரின் துப்பாக்சிச்சூட்டுக்குப் பலியானது தெரிந்ததே.

இதில் தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ.ச. ஊழியர்கள் க சிதம்பரநாதன் (28 வயது), சி. சூரியகுமார் [22 வயது], வே சுப்பிரமணியம் [38வயது] ஆகியோரும் சங்கத்தில் கடமையிலிருந்தபோது துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியாகி இருந்தனர்.

### வலதுகால் இழந்தவர்

கடந்த மார்ச் 10-ம் திகதி சுன்ஞகத்தில் ஆயுதப்படையினர் பீரங்கியால் சுட்ட பொழுது படுகாயமடைந்தவர்களுள் ஒருவரான சங்கரப்பிள்ளை புவனேஸ்வரன் (22 வயது) என்பவருக்கும் சுன்ஞகம் ப. நோ. கூ. சங்கம் 1000 ரூபா நிவாரண உதவியாக வழங்கியுள்ளது.

சுன்ஞகம் சந்தியில் இருந்து மேற்குப்புறமாக காலமைல் தூரத்தில் நின்ற நான்கு பேர் மீது பீரங்கியால் சுட்ட பொழுது குறிப்பிட்ட இளைஞர் படுகாயமுற்று அறுவைச் சிகிச்சை மூலம் வலதுகாலை இழந்துள்ளார்.

கடந்த 83 ஜூலைக் கலவரத்தின் போது உயிரிழந்த புலோலி ப.நோ. கூ. ச. ஊழியர்கள் மூவருக்கும் மூவாயிரம் ரூபா சுன்ஞகம் ப.நோ. கூ. ச. வழங்கியிருந்தது தெரிந்ததே.

(மா)

# பெற்றேல் நிலையத்தில் ரூ. 56,000 கொள்ளை!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு — செங்கலடி ப. நோ கூ. சங்கத்தின் பெற்றேல் நிலையத்தில் துப்பாக்கி ஏந்திய இளைஞர் கோஷ்டியொன்று 56,000 ரூபாவை கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இச்சம்பவம்நேற்று முன் தினம் காலை 10 மணியளவில் நடைபெறது. பெற்றேல் நிலையத்தின் காசாளர் அறைக்குள் பிரவேசித்த இளைஞர் கோஷ்டி காசாளரை துப்பாக்கி முனையில் மிரட்டி பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

ஏருவூர் பொலிசார் இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# இரங்கற் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

வேலணை மேற்கு ஸ்ரீ மீனுட்சி அம்பாள் சனசமூக நிலையம் அன்னை இந்திரா காந்தியின் மறைவையொட்டி தபாலதிபர் திரு மகாலிங்கம் தலைமையில் கூடிய விசேட கூட்டத்தில் பலர் இரங்கல் உரை நிகழ்த்தினர்கள்.

# யன்னல்கள் உடைக்கப்பட்டன

(சாவகச்சேரி)

அச்சுவேலியிலுள்ள கிராம அபிவிருத்திப் பயிற்சிப் பாடசாலையில் சில வாரங்களுக்கு முன்னர் இடம் பெற்ற கொள்ளையை அடுத்து குறித்தபாடசாலையின் யன்னல்கள் பல உடைக்கப்பட்டுள்ளனவாம்.

இச்சம்பவத்தினை யார் செய்தார்கள் என அறிய முடியவில்லை என்று பாடசாலையின் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

# பத்துக் குடும்பங்களுக்கு பல்கலைக்கழக மாணவர் உதவி

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியிலுள்ள வளலாய் என்னும் இடத்தில் ஆயுதப்படையினரால் தீவைத்து நாசமாக்கப்பட்ட வீடுகளைச் சேர்ந்தவர்களில் கஷ்டப்பட்ட சுமார் 10 குடும்பங்களுக்கு ஒருவாரத்துக்குத் தேவையான உணவுப் பொருட்களை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நிவாரண உதவியாக வழங்கியுள்ளனர்.

கடந்த 2-ம் திகதி பலாலி-பருத்தித்துறை வீதியில் இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து சுமார் 23 வீடுகள் எரிக்கப்பட்டது தெரிந்ததே.

இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, மா, பருப்பு ஆகியன வழங்கிய யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கும் ஆலோசித்து வருவதாக மாண

(7-ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

UNIQUE COMMUNICATION SERVICE

யுனிக் கொமுயுனிக்கேசன் சேர்விஸ்




நொடிப்பொழுதில் தெளிவான சர்வதேச தொலைபேசி ரெலெக்ஸ் அழைப்புகளுக்கு இன்றே நாடுங்கள் - யுனிக்

24 மணிநேர சேவை

யாழ் நகர அலுவலகம்
28/18 - 1/1 மகாத்மா காந்தி ரோட்,
(சலுசலவுக்கு அண்மையில)
யாழ்ப்பாணம்.
ரெலெக்ஸ் - 22285 PERIMR CE
தொலைபேசி 22789 22891

கொழும்பு நகர அலுவலகம்
அவுஸதிரேலியா கட்டிடம
த.பெ.1917, 54 யோர்க வீதி, கொழும்பு :
ரெலெக்ஸ்.- 21652, 21742 21918 21931, PERIMP CE
தொலைபேசி:- 22726 547884, 548626, 549065, 549066



இந்தியாவில் மட்டுமல்ல,
இலங்கையிலும் கரடுமுரடான பாதைகளில்
வெற்றிக்களிப்புடன் பவனிவரும்

சொகுஸான சைக்கிள்..... HIND

இன்று இலங்கை மக்களுக்காக நாமே இறக்குமதிசெய்து விநியோகித்து வருகின்றோம்.

HIND சைக்கிள்கள்
நம்பமுடியாத விலை. உறுதியானவை.
முற்றிலும் இந்திய உற்பத்தி.

HIND சைக்கிள்களுக்கு
தவணைமுறை கொள்வனவு
வசதியுண்டு.

கையிருப்பு சொற்பமே.

HIND சைக்கிள்களுக்கு

சில உதிரிப்பாகங்கள்
இனம்!
மாணவர்களுக்கு விசேடவிலைக்கழிவு

M. S. ORGANIZATION

சலட்டி, கரணவாய் தெற்கு, கரவெட்டி.

(யாழ் – நெல்லியடி – பருத்தித்துறை வீதியில், நாவலர் மடம் சந்தியில் இருந்து
எமது விளம்பரப்பலகை உங்களுக்கு வழிகாட்டும்)

**ராணி** (யாழ்ப்பாணம்)
ஜெமினி-சரோஜாதேவி
**பணமா பாசமா**
தினசரி 3 காட்சிகள்

**வின்ஸர்** (யாழ்)
10-30, 2-15 4-15, 6-30
சிவாஜி-லக்ஷ்மி
**தியாகம்**
16-11 84 முதல்
சிவப்புச்சூரியன்

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
**தாயில்லாமல் நானில்லை**
(ஈஸ்ட்மன் கலர்)

**சாந்தி** (யாழ்நகர்)
10-30, 2-30
ரஜனிகாந், ரத்தி, ஜெய்சங்கர்
**முரட்டுக்காளை**

**றீகல்** [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30 only
George C. Scott......
TAPS
இராணுவவீரர்களின் போர் முறையும், பயிற்சித் திறமையும் உங்களுக்கும் உதவும்.

**ராஜா** (யாழ். நகர்)
Daily 10-30, 2-30, 6-30
முத்துராமன்-கவிதா
அசோகன்-தேங்.சீனிவாசன்
**காற்றினிலே வரும் கீதம்**
(ஈஸ்மன் கலர்-புதிய பிரதி)

**ஹரன்** (யாழ்.நகர்)
10-30, 2-30, 6-30
சிவாஜி, பாரதி, நாகேஷ், மனோகர்
**தங்கச்சுரங்கம்**
ஈஸ்ட்மென் கலர்
(புதிய பிரதி)

**லிடோ** சினிமா
தினசரி 10-30, 2-30, 6-30
விஷ்ணுவர்த்தன்-சந்திரகலா
**அலைகள்**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, அன்ட் 6-45
Walt Disneys
THE FOX AND THE HOUND
Techni Color-Cartoon

**மனோகரா** (யாழ்நகர்)
முரளி-குயிலி-Y.விஜயா
கல்லாப் பெட்டி-சிங்காரம்
K. பாலச்சந்தரின்
**பூவிலங்கு**
தந்தையின் செல்வாக்கை பயன்படுத்தி ஒரு ஏழைப் பெண்ணின் சர்வகலாசாலை படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தார். அவர் அந்த முற்கோபக்காரனை அவள் திருத்த முனைந்தாளா? மிகுதி வெண்திரையில்.


# ஆபிரிக்க ஒற்றுமைக்கழகம்: மொரோக்கோ வெளியேற்றம்

அடி அபாய், நவ 13

ஆபிரிக்க ஒருமைப்பாட்டுத் தாபனத்தில் இருந்து மொரோக்கோ விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளது.

வட சகாராவை கைப்பற்றுவதற்கு போராடிவரும் 'பொலிசாரரோ' முன்னணிக்கு இந்த மாநாட்டில் இடம் கொடுக்கப்பட்டதை ஆட்சேபித்தே இந்தநாடு விலகியுள்ளது. இந்த நாடுகள் தாபனத்தின் மாநாடு தற்போது எதியோப்பியாவில் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. [சூ]

## பத்துக் குடும்...

[6ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி]

வர் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் முன்னர் பொது மக்களிடமிருந்து வசூலித்த நிதியிலிருந்தே பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமாக வழங்கி வருவதாகவும் அப்பிரதிநிதி தெரிவித்தார். (மா)

## இன்று

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரத்தினபுரம் உதிரவேங்கை வைரவர் ஆலயத்தில் இன்று புதன்கிழமை தீட்சை வழங்கல் வைபவம் இடம் பெறவுள்ளது. உதவி அரசாங்க அதிபர் திரு. கே. குணராசா வைபவத்தை அங்குரார்ப்பணம்செய்து வைப்பார்.

## ஆறும் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி அன்னம்மா



மறைவு:
14-11-1978

தாங்கள் திடீர் என எங்களை எல்லாம் கண்ணீரில் ஆழ்த்திவிட்டு இறைவனின் திருவடி சேர்ந்து வருடம் ஆறு ஆகியும் தங்களின் இனிய நினைவுகள் எங்களின் உள்ளத்தில் என்றென்றும் நிலைத்து நிற்க இறைவன் அருள் புரியப் பிரார்த்திக்கிறோம்

தங்களின் பிரிவால் மீளாத் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமகன்.
மருமகள், பேரப்பிள்ளைகள்

நா. தாமோதரம்பிள்ளை,
224, ஈப்போ வீதி,
கோலாலம்பூர். 723

## நன்றி நவிலல்

புதுமனைபுகுவிழா (14-11-1984)
"குமரன் இல்லம்"

இவ் இல்லத்தைச் சிறப்புற அமைத்துத் தந்த எழுதுமட்டுவாளைச் சேர்ந்த கட்டிடத்துறை திரு. ஆ. இராசதுரை (ஓய்வுபெற்ற BMC/ PWD), அவரது மகன் செல்வன் இ. இந்திரன் - சிறி- திரு.கா பாலகிருஷ்ணன், கணபதிப்பிள்ளை, தச்சுவேலைசெய்த மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி திரு. வ. இராசையா, அவரது மருமகன் வி.சிவராசா, வேலுப்பிள்ளை ஜெயச்சந்திரன், மின் இணைப்பு அமைத்துத்தந்த நந்தாவில் ஒழுங்கை, கொக்குவிலைச் சேர்ந்த செல்வன் இ. திருக்கேதீஸ்வரன், மற்றும் வீட்டு வேலைகளுக்கு எல்லா விதத்திலும் உதவி புரிந்த சகல ஊழியர்களுக்கும், நண்பர்களுக்கும், அன்பர்களுக்கும் எமதுஇதயம்கனிந்த நன்றி உரித்தாகுக.

திரு/திருமதி ப. சுரேந்திரநாதன் (சுரேஷ்)
குடும்பத்தினர்,
'குமரன் இல்லம்'
எழுதுமட்டுவாள்.

[591]


# Home Finance Ltd.

யாழ். நகர மக்களுக்கு ஹோம் பினன்ஸ் லிமிட்டட்டின் மற்றும் ஓர் புதிய சேவை.
நவீன முறையில் உங்கள் இல்லங்களை அலங்கரிக்க அழகான, உறுதியான FIBRE GLASS வீட்டுத் தளபாடங்களையும்,

- சாப்பாட்டு மேசை கதிரைகள்,
- T. V. மேசை,
- தண்ணீர்த் தாங்கி,
- WASH BASIN,
- TEAPOYS, ★ CENTRE TABLE,
- VERANDAH CHAIRS

என்பவற்றை ஒருங்கே பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்,

**TRADE CENTRE,**
ஹோம் பினன்ஸ் லிமிட்.,
155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


# இன்றைய பலன்

மாதம்—ஐப்பசி
திகதி—29(14-11-1984)
வாரம்—புதன்
திதி—ஷஷ்டிமுன்இரவு11-55 வரை
நக்ஷத்திரம்— புனர் பூசம் 10-54ன் மேல் பூசம்

மேடம்:- தொழில்துறையில் முன்னேற்றம்காணப்படும் மேலதிகாரிகள் ஆதரவுகிட்டும் வணிகத்துறையில் புதியதொடர்புகள் ஏற்படும்.

இடபம்:. பொருள் வரவு உபசாரம் பொழுது போக்கு இவைகளுடன் உற்சாக மூட்டும் செய்தியும் கிடைக்கும்.

மிதுனம்:- துன்பத்தின் சாயல மனதிலே படியும் பிறர் புனைந்துரைகளால் மனம்வேதனைப்படும் உதவிசெய்யப்போய் உபத்திரத்தை தேடிக் கொள்வீர்.

கடகம்:- எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும் எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

சிங்கம்:- எண்ணம் போல் வாழ்வு மலரும் சமூகத்தில் மதிப்பு உயரும் நண்பர்கள் உதவுவதற்கு முன்வருவார்கள் சாந்தகுணம் சிறப்பைத் தேடித்தரும்.

கன்னி:- எதிலும் அலட்சிய மனப்பான்மை தோன்றக் கூடும் சகோதரவழியால் சஞ்சலத்திற்கு இடமுண்டு இனபந்துக்களின் தொல்லையுமதிகரிக்கும்.

துலாம்:- மாதுருவழிப் பெருமைக்கும் இடமுண்டு மனம்போல்யாவும் நடக்கும் இன்று கல்வியில் சிறப்பும் உறவினர் கொண்டாட்டமும் உண்டு.

விருச்சிகம்:- இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும் இனசனம் கூடுவர் புத்திரசுகத்துடன் தொழில்துறையில் வெற்றியும் கிடைக்கும்.

தனுசு:- வயிற்றுக்கோளாறு தோன்றக் கூடும் உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும் வேவுகணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர்.

மகரம்:- களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர் காதலர்கள் வாழ்வில் தித்திப்மான சம்பவங்கள் நடைபெறும்.

கும்பம்:- சிரித்துப்பேசியவர்கள் இன்று சீறி விழுவார்கள் உதவிசெய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துக் கொள்ள நேரிடும்.

மீனம்:- பிதாவழியிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு புண்ணியகாரியங்களில் மனம் நாடும் நீண்ட நாள் மனக்குறை நிவர்த்தியாகும்.

திருமலை
வே.ரவீந்திரன்

## சித்தன்கேணி சிதம்பரேஸ்வரர் குடமுழுக்கு

தரிசிக்க முத்திதரும் தலம் விராட் புருடனது இருதயத்தானம்; சர்வ சங்கார காலத்திலும் அழியாதது எனச் சிறப்பித்துச் செல்லப்படுவது தமிழ் நாட்டிலுள்ள சிதம்பரம் என்னும் தலம். சென்ற மகாயுத்தத்துக்கு முன் இந்நாட்டவரில் வசதிபடைத்தோர் அங்கு சென்று தரிசனம் செய்தல் இலகுவாயிருந்தது இன்றோ நிலைமை வேறு. வசதியில்லாதோரும் உடையோரும் அடிக்கடி தரிசித்து நன்மை பெறவேண்டுமென்ற நோக்கத்துடன் எங்கள் ஈழநாட்டிலும் இரண்டு சிதம்பரத் தலங்கள் தாபிக்கப்பட்டன அவையிரண்டும் வட்டுக்கோட்டைத் தொகுதியிலேயே அமைந்துள்ளன என்பது மகிழ்ச்சி தருவதாகும்.

அவற்றுள் ஒன்று காரைநகர்த் திண்ணபுரத்தில் அம்பலவி முருகர் என்னும் பெரியாரால் தாபிக்கப்பெற்ற சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரர் ஆலயம். மற்றையது சித்தன்கேணித் தனுவோடையில் சுப்பிரமணியர் கதிர்காம ஞானியாரால் 1950ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட சிவகாமியம்மை சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயம் அங்கே சிதம்பரத்தில் பூசைகள், விழாக்கள் என்ன ஒழுங்கில் எந்த எந்த மாதத்தில் நடக்குமோ அவ்விதமே இங்கு இந்த இரண்டு சிவாலயங்களிலும்-சிதம்பரங்களிலும் நடைபெறும். ஈழத்துச் சிதம்பரம் என இவை இரண்டும் வழங்கி வருவதும் அக்காரணங்களாலேயாம்

சென்ற 1983 ஆம் ஆண்டு தைமாதத்தில் சுவாமியும் பரிவார மூர்த்திகளும் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு கோவில் மண்டபங்கள், தூபிகள் கோபுரங்கள் முதலிய அனைத்தும் புனரமைத்துச் செப்பம் செய்யப்பட்ட நிலையிலே இன்று காலை குடமுழுக்கு எனப்படும் மகாகும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது ஆலய அர்ச்சகர் சிவத்திரு. ஞானசபாரத்தின சர்மாவும் மகன் வாசுதேவ சர்மாவும் கண்ணை இமை காப்பதுபோலத் தேவஸ்தானத்தைக் காத்து வருகின்றனர். கும்பாபிஷேக விழாவில் சுன்னுகம் சிவத்திரு. நா. சோமாஸ்கந்தக் குருக்கள் தலைமையில் பதின்மூவருக்கு மேற்பட்ட குருமாரும், திருமுறைகள் ஓதும் பண்ணிசை வல்லாரும், வேத பாராயணஞ் செய்வோரும் பங்குபற்றுவர்.

—அ. ஆறுமுகம்

## விளையாட்டுக் கழகத்தின் முன்மாதிரி

(யாழ்ப்பாணம்)

கைதடி வடக்கு கிராம சேவையாளர் பிரிவில் வசிக்கும் 50 இளைஞர் யுவதிகளுக்கு கைதடி வடக்கு செவின் ஸ்டார் விளையாட்டுக் கழகம் முன்னின்று அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

இன்றைய சூழ்நிலையில் இப்பகுதி மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய சேவைகளைப் பூர்த்தி செய்து கொடுப்பதில் மேற்படி விளையாட்டுக் கழகம் உழைத்து வரும் என்று கழகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

## பேராதனை பல்கலைக்கழக

(வெளிநிலை விரிவுரை)
கல்வியாண்டு 1984/85

கலை மாணி (B. A.)
மேற்படி பயிற்சி நெறிக்கு கலை முதற் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஆரம்பம்: 25 11-1984**

சகல மாணவர்களின் கவனத்திற்கு:
அகாலமரணமான கல்லூரி முதல்வர்
**திரு. த. வர்ணகுலேந்திரனுக்கு**
அனுதாபம் தெரிவிக்குமுகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த சகல விரிவுரைகளும் மீண்டும் வழமைபோல் 17-11-84ல் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றேன்.

உதவிப் பதிவாளர்
பட்டப் படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (717)

### யாழ்குடா நோக்கி வந்த சுழிக்காற்று

# தமிழகம் திரும்பியதன் விளைவு

## ஒரு லட்சம் பேர் வீடிழப்பு; 5 பேர் பலி!

### 55 ஆயிரம் உணவுப்பொட்டலம் விநியோகம்

**சென்னை, நவ. 13**

**இலங்கையின் யாழ்குடாநாட்டிற்கு 250 மைல் தொலைவில் நிலை கொண்டிருந்த பவன அமுக்கம் சுழிக்காற்றாக மாறி தமிழகத்தில் கடுஞ் சேதத்தை விளைவித்துள்ளது.**

இக்காற்று தமிழகத்தின் செங்கல்பட்டு மாவட்டத்திலேயே பெருமளவு பாதிப்பை உண்டு பண்ணியுள்ளது.

கடும் மழையினுலும் சுழிக்காற்றினுலும் சுமார் ஒரு லட்சம் பேர் வீடிழந்துள்ளனர். 5 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் காயமடைந்து ஆபத்தான நிலையிலுள்ளனர்.

பெருஞ்சாலைகளுக்குக் குறுக்கே பாரிய மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன. இதனுல் போக்குவரத்துக்கள் பல கிராமங்களுடன் துண்டிக்கப்பட்டுள்ளன. தொலைபேசித் தொடர்புகளும் அறுபட்டிருக்கின்றன என்று கூறப்பட்டது.

சென்னையில் குடிசைவாழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பல குடிசைகளின் கூரைகள் காற்றோடு அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இதனுல் ஒரு லட்சம் பேர்வரை வீடு வாசல்களை இழந்துள்ளனர்.

மீன்பிடிப் படகுகளும் சேதமாகியுள்ளன. மீனவக் குடியிருப்புகளும் சேதமடைந்துள்ளன.

தமிழக அரசு நேற்றுசுமார் 55 ஆயிரம் அகதிகளுக்கு உணவுப் பொட்டலங்களை வழங்கியது. இறந்தவர்களின் எண்ணிக்கைமேலும் அதிரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது,

இக்காற்று 100 முதல் 200 கிலோமீட்டர் வேகத்தில் வீசியது. (கி)

# சர்வகட்சி மாநாடு

## டிசம்பர் 14, 15ல் நடக்கும்

(கொழும்பு)

சர்வகட்சி மகாநாட்டின் அடுத்த முழுநிறைவான கூட்டத்தொடர் அறிவிக்கப்பட்ட திகதிக்கு முன்னதாகவே நடைபெறும்.

இந்தக் கூட்டத்தொடர் கொழும்பு பண்டாரநாயக்கா மாநாட்டு மண்டபத்தில், அடுத்த மாதம் 14ஆம், 15ஆம் திகதிகளில் நடைபெறும்.

ஒவ்வொருநாளும் பிற்பகல் 4-30 மணிக்கு கூட்டம் ஆரம்பமாகும். பல தூதுக்குழுவினரும் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு வசதியாக இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்தக்கூட்டம் அடுத்த மாதம் 17ம், 18ம் திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

### மட்டக்களப்பு தண்ணுமுனை

## வீட்டிலிருந்து இரு இயந்திர துப்பாக்கிகள் மீட்பு!

### தாயும் மகனும் கைது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்புப் பகுதியிலுள்ள தண்ணுமுனை என்ற இடத்திலுள்ள வீடொன்றில் இரு இயந்திரத் துப்பாக்கிகள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு இவ்வீட்டைச் சோதனையிட்ட பொலிசார் இங்கிருந்து இவ்விரு இயந்திரத் துப்பாக்கிகளையும் கண்டெடுத்தனர்.

இத்துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டதையடுத்து இவ்வீட்டிலிருந்த பெண்ணெருவரும் அவரது மகனொருவரும் மேல் விசாரணைக்காப் பொலிஸ் நிலையம் கொண்டு ரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது

மட்டக்களப்பு பொலிஸ்நிலையத்தின் பயங்கரவாத முறியடிப்புப் பிரிவினரே இத்துப்பாக்கிகளைக் கைப்பற்றினர். [கி]

## நேற்று இருமணி...

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

ஹமீத் ஆகியோர் இவர்களைச் சந்தித்தனர்.

சுமார் இரண்டரைமணி மணிநேரம்வரை இந் சந்திப்பு ஜனதிபதிமாளிகையில் நேற்றிரவு இடம் பெற்றது.

திரு அமிர்தலிங்கம் வடக்கு-கிழக்குப் பகுதிகளின் தமிழ்ப் பிரதேசங்களில் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களைக் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவு கொக்கிளாய்ப் பகுதியில் சிங்களக்குடியேற்றம், திருமலைதுறைமுகவிஸ்தரிப்பில் தமிழர்வெளியேற்றம், வவுனியாவில் தமிழ்ப் பகுதிகள் சிங்கள உதவி அரச அதிபர் பிரிவுடன் இணைப்பு, போன்ற தமிழ்ப்பிரதேசங்களில் இடம்பெறும குடியேற்றங்களுக்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது

இவைதவிர யாழ்ப்பாணப் பகுதியில் கடந்தவாரம் இடம் பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம், பர்மதிராவக வீச்சுச்சம்பவம், உரும்பிராய், மற்றும் ஏனையபகுதிகளில் வீடெரிப்பு, ஏடுஞ்சோதனைகள் ஆகியனகுறித்தும் கூட்டணியினர் ஆட்சேபம் தெரிவித்தனர்

''இத்தகைய வேதனையளிக்கும் சபபவங்கள் இடம்பெறும் போது எவ்வாறு சமரசப் பேச்சுக்களில் கலந்துகொள்ள முடியும்?'' என்றும் திரு. அமிர்தலிங்கம் கேள்வி எழுப்பினர்.

ஜனதிபதி தாம் இம்முறைப்பாடுகள்குறித்து ஆராய்வதாக கூட்டணியினரிடம் உறுதியளித்தார். (கி)

## இன்று பட்ஜட்...

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

மென்று எதிர்பார்க்கப்படுகிறது. பாஸ் போர்ட் விண்ணப்பத்துக்கு 200 ரூபாயிலிருந்து 400 ரூபாய்க்கு முத்திரை உயர்த்தப்படுமென்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அவ்வளவு தூரத்துக்கு உயர்த்தப்படமாட்டாதென்று நம்பப்படுகிறது.

சம்பள உயர்வு எவ்வளவு கிடைக்குமென்பது அரசாங்க தனியார் ஊழியரது ஏக்கம். எது எப்படியிருந்த போதிலும் சாதாரண மக்களுக்கு ஜெணியின் 'பட்ஜட்' எவ்வளவு தூரம் ஆறுதலளிக்கும் என்பதுதான் பொது மக்களின் கேள்வியாகவுள்ளது.

## எம். ஜி. ஆர்...

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் எச். வி. ஹண்டே நேற்று முன் ,னம் தெரிவித்தார்

அவர் வெளியிட்டுள்ள மருத்துவ அறிக்கையில், ''கடந்த 48 மணி நேரத்தில் முதலமைச்சர் உடல்நிலையில் மிக நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தினமும் காலை, மாலை ஆகிய இருவேளைகளிலும் இரண்டுமணி நேரம் கதிரையொன்றில் உட்காரும் நிலைக்கு அவரின் உடல்நிலை மாறியுள்ளது அவரது பொதுவான எல்லாஉடல் நிலையும் நன்ருகவே இருக்கிறது இவற்றைக்கொண்டு பார்க்கையில் முதலமைச்சர் சிறுநீரக அறுவைச்சிகிச்சை இன்றியே சுகமடையலாம்'' என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது (சூ)

# இளைஞர்கள் கைது

[கிளிநொச்சி]

வட்டக்கச்சி, ராமநாதபுரம், கிளிநொச்சிப் பகுதிகளில்மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் படத்தை ஒட்டிய சுமார் பத்து இளைஞர்கள் ஆயுதப் படையினரால் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை கனகரத்தினம்

கட்டுடையைச் சேர்ந்த மலாயன் பென்சனியர் செல்லத்துரை கனகரத்தினம் காலமாகிவிட்டார் அன்னர் மங்கையற்கரசியின் அன்புக்கணவரும், அம்பிகாதேவி, வசந்தாதேவி, Dr குகநேசன் (அரசினர் வைத்தியசாலை அககுறணை), சாந்தாதேவி, தேவமனேகரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சோமாஸ்கந்தர் (உதவி அத்தியட்சகர் திறைசேரி), கருணனந்தன் (சுகாதார பரிசோதகர் வட்டுக்கோட்டை), இரங்கநாதன் (சுகாதார பரிசோதகர் [A. M. C] முல்லைத்தீவு) சிவகுமாரன் (நீர்ப்பாசன இலாகா செங்கலடி), மாலினி ஆகியோரின அன்பு மாமனுரும், லதா, அருள்ராஜ், கபிலன், வரதன், சேந்தன், அஜந்தன் ஆகியோரின் அன்புப் பேரனுருமாவார் அன்னுரின் ஈமக்கிரியைகள் இன்று புதன் கிழமை 10 மணியளவில் பிப்பிலி மயானத்தில் நடைபெறும். 718

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.

## ஜனதிபதியின் விடுமுறை

## வாசஸ்தலம் அருகே குண்டு!

[கொழும்பு]

ஜனதிபதியின் நுவரேலியா விடுமுறை வாசஸ்தலத்துக்கு முன்னுல் குண்டொன்று இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது!

கடந்தஞாயிற்றுக்கிழமை மாலையிலேயே இக்குண்டு கண்டுபிடிக்கப்பட்டது. பாதுகாப்புப்படை வீரர்கள் உடனடியாக இதனை வெடிக்கச்செய்து ஆபத்தைத் தவிர்த்தனர் என்று கூறப்பட்டது.

ஜனதிபதியின் இவ்வாசஸ்தலம் அடிக்கடி ஜனதிபதி குடும்பத்தினரால் விடுமுறைகளின்போது பாவிக்கப்பட்டுவருவது குறிப்பிடத்தக்கது.

இக்குண்டு வெடிப்புச்சம்பவம் தொடர்பாகப் புலன் விசாரணைகள் இடம்பெறுகின்றன. பேதுருதாலகாலை ரூபவாஹினி கோபுரங்களுக்குக் குண்டுவைத்தவர்களே இச்சம்பவத்திலும் இறங்கியிருக்கலாமெனச் சந்தேகிக்கப்படுகிறது. [கி]

## யாழ். சம்பவத்துக்கு...

(1ம் பக்க 3ம்கலத் தொடர்ச்சி)

யாழ். ஆஸ்பத்திரி பிரசவ வார்ட்டுக்கு முன்பாகவுள்ள வெளியில் சகல ஊழியர்களும் ஒன்றுகூடி வரிசையாகப் புறப்பட்டார்கள். பின்னர் குழந்தைகள் சிகிச்சை நிலையத்துக்கு அருகாமையில் உள்ள கூட்ட மண்டபத்துக்கு வந்து சேர்ந்தார்கள்.

கிறிஸ்தவ தேவாலயத்தில் சுருவம் சுற்றும் பொழுது வணபிதாக்கள், கன்னியாஸ்திரிகள் தொடர்ந்து செல்லும் கிறிஸ்தவ அடியார்கள் சுற்றுப்பிரகாரம் செய்வதுபோல் ஊர்வலத்தில் சென்றவர்கள் காணப்பட்டனர்.

கூட்ட மண்டபத்தில் கூடியிருந்த வைத்திய கலாநிதிகள், வைத்தியர்கள், தாதிகள், உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் ஆகியோர் தரப்பில் பிரதிநிதி ஒருவர் வைத்திய அதிகாரி நச்சினுர்க்கினியனிடம் மகஜரைக் கையளித்தார்.

மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்களாகிய நாங்கள் பகலும், இரவும் சகல நேரங்களிலும் வேலைக்குச் சமுகமளிக்க வேண்டியுள்ளது பயங்கரமான சூழலிலேயே நாங்கள் பிரயாணங்களை மேற்கொண்டு வேலைக்குச் சமுகமளிக்க வேண்டியுள்ளதென்பதை கடந்த காலங்களில் தங்களின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். கடந்த வெள்ளிக்கிழமை யாழ். ஆஸ்பத்திரிக்கு வெகு அண்மையிலுள்ள யாழ். நகரில் இடம்பெற்ற சம்பவங்கள் பற்றியும் தங்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேம். இச்சம்பவத்தின் போது குண்டுவெடிப்பு நடைபெற்ற இடத்தை தவிர்ந்த வேறு இடத்தில் நின்ற இரண்டு வடபிராந்திய போக்குவரத்துச்சபை பஸ்கள் மீது ஆயுதப்படையினர் சுட்டனர். இந்த இருபஸ்களிலும் பிரயாணிகள் அதிகளவில இருந்தனர். இந்த துப்பாக்கிப் பிரயோகத்தின் போது வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்சாரதியும், பாடசாலை மாணவரெருவரும் பலியானுர்கள். மருத்துவ மாணவியொருவர் உட்பட மற்றும் பல பிரயாணிகளும் இத்துப்பாக்கிப் பிரயோகத்தின் போது படுகாயமடைந்தனர்.

## 'இப்படியான சம்பவம் இனிமேல் நடைபெருது''

### கேர்ணல் விமலரத்ன உறுதி

(யாழ்ப்பாணம்)

இனிமேல் இப்படியான சம்பவங்கள் நடைபெறமாட்டாதென்று கேர்ணல் விமலரத்தின நேற்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரி அதிபரிடம் உறுதியளித்தார்.

அர்சாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், இச்சம்பவம்பற்றி இணைப்பு அதிகாரிக்கு தெரிவித்ததைத்தொடர்ந்து கேர்ணல் விமலரத்தன வேம்படிமகளிர் கல்லூரிக்கு நேற்றுச் சென்ருர்.

அவருடன் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், வடமாநில கல்விபணிப்பாளர் திரு. எம் சிமியம் பிள்ளை ஆகியோரும் சென்றிருந்தனர்.

பாதிக்கப்பட்ட மாணவியை அவர்கள் பார்வையிட்டனர். பின்னர் ஆசிரியை திருமதி. அரசரத்தினத்தையும் அழைத்து இச்சம்பவம்பற்றி கேட்டறிந்தனர்.

இப்படியான சம்பவம் இனிமேல் நடைபெருமல் பார்த்துக்கொள்வதாக கேர்ணல் விமலரத்ன உறுதியளித்தார். யாழ்ப்பாணத்தில் இப்படியானசம்பவம் நடந்ததை யிட்டுதாம் வருந்துவதாகவும் அவர் தெரிவித்தார். (க)

## யாழ்ப்பாணத்தில் சட்..

(5ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

யின் முகத்திலும், சட்டையிலும் திரவம் தெளித்த அடையாளம் காணப்பட்டதாகவும், தமதுகாரில் அந்த மாணவியை ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்ல முற்பட்ட போது, வேறுசிலர், அம்மாணவியை, கல்லூரிக்கு அழைத்துச்சென்றதாகவும் கூறினுர். (க)

## மரண அறிவித்தல்

### திருமதி தம்பிமுத்து நாகம்மா

நவாலியூரைப் பிறப்பிடமாகக்கொண்ட திருமதி தம்பிமுத்து நாகம்மா காலமாகிவிட்டார். இவர் திரு. தம்பிமுத்து சபாரத்தினம் (கிராமசேவையாளர், மானிப்பாய்), திருமதி நாகரத்தினம் தியாகராஜா (நாவற்குழி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவர். அன்னரின பூதவுடல் 14-11-84 புதன்கிழமை மாலை 3 மணிக்கு ஈமக் கிரியைகளுக்காக ரவி வாசா முதலியார்கனகசபை வீதியிலிருந்து மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

730